விலை ரூபா 5-00 Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சங்கு02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 31 ஞாயிற்றுக்கிழமை (16 09.2001) தொலைபேசி: 3378 ஒலி 279

## இலங்கை அரசின் பொய்ப் பிரசாரத்திற்கு ஆப்பு
# அமெரிக்கா மீதான தாக்குதலுக்கு
# விடுதலைப்புலிகள் கண்டனம்!

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அறிக்கை

(இலண்டன்)

**அமெரிக்க நகரங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல்களை தமிழீழ விடுதலைப்புலிகள் வன்மையாகக்கண்டித்துள்ளனர்.**

**மிலேச்சத்தனமான மனிதப்படுகொலைகள் கவலை அளிப்பதாகவும் இச்சம்பவத்தில் மரணித்துள்ள பல்லாயிரக்கணக்கான மக்களின் குடும்பத்துயரத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பங்கு கொள்வதாகவும் தமிழ்நெற்இணையத்தளத்திற்கு நேற்று அளித்த பேட்டியொன்றில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

கடந்த செவ்வாய்க் கிழமை அமெரிக்காவின் முக்கிய நகரங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலுக்குச் சார்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளனர் என்று ஸ்ரீலங்கா அரசு தனது ஊடகங்கள் மூலம் பொய்ப் பிரசாரங்கள் மேற்கொண்டு வருவதை மறுத்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

(8ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நோக்கி வரும் ஆப்கானிஸ்தர்களை பதிவுசெய்யுமாறு பணிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் தாக்குதல் அச்சம் காரணமாக ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறி இலங்கைக்கு தஞ்சம் கோரி வருபவர்களை, தனித் தனியாகப் பதிவு செய்து கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சு துறைமுக மற்றும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் தமிழர்களின் 7கடைகள்தீக்கிரை

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப்பகுதிகளில் தமிழர்களுக்குச் சொந்தமான ஏழு வர்த்தக நிலையங்கள் நேற்று மாலை 5.30 மணியளவில் தீக்கிரையாகியுள்ளன.

வெள்ளவத்தை டபிள்யூ எச்.சில்வா மாவத்தையில் உள்ள 7 கடைகளே தீக்கிரையாகியுள்ளன.

(8ஆம் பக்கம் பார்க்க)

## தகுதிகாண் அரசிற்கு உதவிய ஜே.வி.பிக்கு 62மி.லஞ்சம்?

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் தகுதிகாண் அரசு அமைப்பதற்கு ஜே.வி.பி ஒத்துழைத்தமைக்கு அக்கட்சிக்கு இலஞ்சமாக 62மில்லியன் ரூபாவை அரசாங்கம் வழங்கியதென தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொது ஜன ஐக்கியமுன்னணி அரசு பெரும்பான்மையை இழந்து ஆட்டம் கண்ட நிலையில் தகுதிகாண் அரசு அமைப்பதற்கு ஜே.வி.பி கை கொடுத்தது இதற்கு இலஞ்சமாக அரசாங்கம் ஜே.வி.பிக்கு 62 மில்லியன் ரூபாவை வழங்கியதென எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

அத்துடன்இந் நிதிக்கொடுப்பனவு தொடர்பான ஆதாரங்களும் தமக்கு கிடைத்திருப்பதாக அக்கட்சிகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை சந்திரிகாவின் அரசு தனது ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள பெருமளவு பணத்தை இலஞ்சமாக வாரி இறைத்த விடயம்வெளியே கசியத்தொடங்கி விட்டதென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ)

## ஐ.தே.கட்சியின் கூட்டத்தில் குண்டுத்தாக்குதல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினால் நாவலப்பிட்டியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரசாரக் கூட்டத்தில் இனந்தெரியாத நபர்களால் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று இடம் பெற்ற இத்தாக்குதலால் பலர் காயங்களுக்குள்ளானதுடன் சமயஸ் தலமொன்றும்பலத்த சேதத்திற்குள்ளானது.

நாவலப்பிட்டி ஐக்கியதேசியக் கட்சி அமைபபாளரான மாஸல்வில்ஸன்ஹாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 'நாட்டின் தற்போதைய நிலை' என்னும் தலைப்பிலான பிரசாரத்தின் போதே இத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது. (ந-4)

# அரசின் அமைச்சரவைக் குறைப்பு இனப்பிரச்சினைக்கு தீர்வாகாது!
## சிறுபான்மைக் கட்சி எம்.பிக்கள் கருத்து

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி - ஜே.வி.பி. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அமைச்சரவைஎண்ணிக்கை குறைக்கப்பட்டிருப்பதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வோ, அன்றி யுத்தத்திற்கு முடிவோ ஏற்படப் போவதில்லை என்று சிறுபான்மைகட்சிப்பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சிறிலங்காமுஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

அமைச்சரவைக் குறைப்பு அரசுக்கு சொற்ப நிதியை மிச்சப்படுத்திக் கொடுக்குமே தவிர யுத்தம் விரிவடையும் போது இதற்கு ஈடாகப் பெருந்தொகையான பணம் செலவு செய்யவேண்டி வரும் எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூடிய வகையில் பேச்சு வார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்கி யுத்தத்திற்கு முடிவு

(8ஆம் பக்கம் பார்க்க)

## அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் யாழ்மாணவர்கள்சாதனை

(கொழும்பு)

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூன்றுமாணவர்கள் முதலாம் இடத்தைப்பெற்று தங்கப்பதக்கங்களையும், மூன்று மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்றுவெள்ளிப் பதக்கங்களையும், பெற்று யாழ்.மண்ணுக்கு பெருமை தேடித் தந்துள்ளனர்.

முதலாம் இடம்

**தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்களின் வபரம்**

★ செல்வி.வின்ரா அன்ரன்

(8ஆம் பக்கம் பார்க்க)

# மட்டுநகர் முழுவதையும் மீட்டெடுக்கும் யுத்தம் எந்நேரமும் நடக்கலாம் - புலிகள் அறிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இராணுவ முகாம்கள மீது எந்த நிமிடத்திலும் நாம் தாக்குதல்களை நிகழ்த்தலாமென விடுதலைப் புலிகள் முன்னறிவித்தலை விடுத்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள எழுவான் கரைப் பகுதி மக்களுக்கேவிடுதலைப் புலிகள் மேற்கண்டவாறு பாதுகாப்பு முன்னறிவித்தலை விடுத்துள்ளனர்.

எழுவான்கரை மக்களுக்கு என்ற தலைப்பில் விடுதலைப் புலிகள் இது தொடர்பாக அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

மட்டுநகர் வாழ் தமிழ் உறவுகளே இராணுவ முகாம்கள் மீது எமது தாக்குதல்கள் எந்த நிமிடமும் நடைபெறலாம். தாக்குதலின் போது உங்களைநீங்களே பாதுகாக்க வேண்டும்

நாம்மேற்கொள்ளும் எறிகணைவீச்சுக்களினால்வீணாக உயிர் இழப்புக்கள் ஏற்படக்கூடாதென்பதற்காகவே இவ் வேண்டுகோளை விடுக்கின்றோம்:

இவ் வேண்டுகோளை நீங்கள் கடைப்பிடிப்பீர்கள் என நம்புகின்றோம்.

மட்டு நகர் முழுவதையும் மீட்டு எமது மக்களின் சுகந்திர வாழ்வை உறுதிப்படுத்த வேண்டியது எமது கடமை:

எமது தாக்குதலின் வெற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் தாக்குதலில் 4 சிப்பாய்கள்காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று நண்பகல் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் நான்கு இராணுவச் சிப்பாய்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதன வீதியில் சம்மாந்துறை இராணுவ முகாமுக்கு வந்து கொண்டிருந்த இராணுவ கவசவாகனம் மீதே இக்கிளைமோர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கவசவாகனம் சேதமடைந்ததுடன் அதில் பயணம் செய்த நான்கு சிப்பாய்களும் படுகாயமடைந்துள்ளனர்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அடுத்த வருட ஆரம்பத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

(கொழும்பு)

அடுத்தவருடம் ஜனவரி மாதம் முதல் அரசாங்க ஊழியாகளுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக தொழிலமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை இம்மாத இறுதியில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதால் புதிய வருட ஆரம்பத்தில் சம்பள உயர்வு சாத்தியப்படும் என மேலும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சம்பள நிர்ணய ஆணைக்குழு உறுப்பினர் டபிள்யு. எச். பியதாச இது பற்றித் தெரிவிக்கையில்; பல்வேறு துறைகளையும் சார்ந்த 300 இற்கும் அதிகமான தொழிற் சங்கத்தின் தலைவர்கள் மற்றும் அரசதுறை அதிகாரிகளிடமிருந்து எழுத்து மூலம் பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் சம்பள உயர்வு வழங்குவது குறித்து ஜனாதிபதி சிபார்சு செய்யப்படும் என்றார். (உ)

## படைத் தரப்பில் ஒருவர் பலி

(மன்னார்)

நெடுங்கண்டல் பகுதியில் கடந்த 12 ஆம்திகதி காலை ஏற்பட்ட மோதல் சம்வத்தில் படைத்தரப்பில் ஒருவர் பலியானதுடன் இருவர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழந்ததுடன் 3 பேர் காயமடைந்ததாகவும் ஊடகத்தகவல் மையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## விளையாட்டுப் போட்டி

கரவெட்டி கன்பொல்லை இராஜ கிராமம் பாலர் விளையாட்டுப்போட்டி இன்று இராஜ கிராம சனசமூக நிலைய மைதானத்தில் எஸ். வசீகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீனிவாசன் பருத்தித்துறை பிரதேச சபை உப-தலைவர் பீ இரவீந்திரன் (ரஜீக்) கரவெட்டி பிரதேசசபைச் செயலாளர் எஸ். பசுபதி ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

(செ-52)

## 352 மிதி வெடிகள் மீட்பு

கடந்த வாரம் யாழ். குடா நாட்டில் நாகர் கோவில், நாவாந்துறை, சாவகச்சேரி, மூளமாலை ஆகிய பகுதிகளிலும், அம்பாறையில சஞ்சி குடிச்சாறு பகுதியிலும் மிதிவெடியில் சிக்கி மூன்று பொது மக்களும் மூன்று இராணுவத்தினரும், ஒரு பொலிஸாரும் காயமடைந்துள்ளனர் என்றும்,

கடந்த வாரம் 7 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை அரியாலை. கொழும்புத்துறை, கிளாலி ஆகிய பகுதிகளில் 352 மிதி வெடிகள் கண்டெடுக்கப்பட்டதாகவும் விசேட ஊடகத் தகவல் மையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## சீருடை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளில் தற்போது விநியோகிக்கப்பட்டு வரும் சீருடையினை இவ்வருடம் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றி பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களும் குறித்த ஆவணங்களைக் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

(உ-106)

## வியாபாரி விளக்கமறியலில்

(மந்திகை)

கடந்த செவ்வாய்க்கிழமை வல்வைச் சோதனைச் சாவடி ஊடாக வடமராட்சிக்குச் செல்லும் போது சுன்னாகத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் கண்ணதாஸன் என்பவர் பற்றறி மற்றும் அழகு சாதனப் பொருட்களுடன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கடந்த வெள்ளியன்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அடுத்த மாதம் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதிவான் அ. பிறேம்சங்கர் உத்தரவிட்டார்.

(உ- 23)

## நிமலராஜன் நினைவாக மாணவர் மட்டத்தில் பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மறைந்த ஊடகவியலாளர் நிமலராஜனின் ஓராம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம், மாணவர்கமத்தியில் பட்டிமன்றம் மற்றும் பேச்சுப் போட்டி என்பவற்றை நடத்தவுள்ளது.

வயது, வகுப்பு வேறுபாடின்றி மாணவர்கள் எவரும் இப்போட்டிகளில் பங்கு கொள்ளலாம்.

போட்டிகளில் பங்குகொள்வோர் தமது விண்ணப்பங்களை ஒக்டோபர் மாதம் 2ம் திகதிக்கு முன்னதாக தலைவர் வே. தவச்செல்வன், யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் 26/26 பல்கலைக்கழக வீதி, திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். (உ-43)

## தமிழ் மொழி தினவிழா வவுனியாவில்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு இடையிலான தமிழ் மொழித்தின விழா அடுத்த மாதம் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்விக்கல்லூரி மட்டத்தில் நடைபெற்ற மொழித்திறன் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களும் இதில் பங்கு கொள்ளவுள்ளனர்.

(உ-106)

## கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்க

(மந்திகை)

தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றி. இடப்பெயர்வின் பின் வடமராட்சிப் பகுதியில் வசித்தவர்களில் இதுவரை கொடுப்பனவை பெற்றுக் கொள்ளாதவர்களை வடமராட்சி கல்வி வலய ஆரம்ப பிள்ளைப்பருவ உதவிக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வடமராட்சி பாலர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. செ-23)

## உசாத்துணை பகுதி பாவனை

[யாழ்ப்பாணம்]

நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலக பொது நூலக உசாத்துணைப் பகுதி மாணவர்களின் நன்மை கருதி காலை 9 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை இயங்குகிறது.

திங்கட்கிழமை மற்றும் பொது விடுமுறை தினங்களிலும் உசாத்துணைப் பகுதி திறந்திருக்கும் எனவும் மாணவர்கள் இச்சேவையை உரிய முறையில் பயன்படுத்தி நன்மையடையலாம் எனவும் நூலகர் தெரிவித்தார்.

ஏனைய நூலகங்கள் திங்கட்கிழமைகளிலும் பொது விடுமுறை தினங்களிலும் மூடப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-106)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்]

நேற்றைய தினம்வேம்படிச் சந்திப் பகுதியில்இடம்பெற்ற மோட்டார்சைக்கிள்விபத்தில் ஆஸ்பத்திரிவீதியைச் சேர்ந்த நே.ஜெயா [வயது30] என்பவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ.10)

## வாடிக்கையாளர் தினம்

அச்சுவேலி மக்கள் வங்கி வாடிக்கையாளர் தினமும் சிறுவர் சேமிப்புக்கான பரிசில் வழங்கலும் அச்சுவேலிபுனித தெரேசா மகளிர் கல்லூரி மண்டபத்தில் மேற்படி வங்கி முகாமையாளர் மு. சிவனேசன் தலைமையில் 19ஆம் திகதிபுதன்கிழமை பி.ப 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகமக்கள்வங்கியின்வடவலய உதவிப் பொது முகாமையாளர் சி. இளம்பிறைநாதனும், சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் சு.சிவபாதமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ)


தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு

# ஓர் அன்பான வேண்டுகோள்



தமிழ் பேசும் மக்களின் தேசியத் தலைவனாக, தந்தையாக, தேசத்தின் வழிகாட்டியாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர் தந்தை செல்வா ஆவர். தந்தை அவர்கள் மறைந்து இருபத்தைந்து ஆண்டுகளின் நிறைவை முன்னிட்டு அவரின் நினைவாக அடுத்த வருடம் (26-04-2002) பின்வரும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல அறங்காவற்குழு தீர்மானித்துள்ளது.

அவையாவன:

1. தந்தையின் வரலாறு தமிழ்த் தேசியத்துடன் பின்னிப் பிணைந்து நிற்பதால் அவரது பாராளுமன்ற உரைகள், மகாநாட்டுத் தலைமை உரைகள், அவர் பற்றிய பத்திரிகைச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றைத் தொகுத்து ஒருவரலாற்று ஆவணமாக வெளியிடுதல்.
2. தந்தை பற்றிய குறுந் திரைப்படம் வெளியிடுதல்.
3. வருடா வருடம் நினைவுப் பேருரைகளை நடாத்துதல்.
4. நினைவுத் தூபியை அழகுபடுத்திப் பாதுகாத்தல்.

இவற்றோடு மேலும் பல வேலைத் திட்டங்களைத் தொடரவும் திட்டமிட்டுள்ளோம்

இத் திட்டங்களை நிறைவேற்ற அனைத்துத் தமிழ்ப் பேசும் மக்களிடமிருந்தும் பேராதரவை வேண்டி நிற்கின்றோம். மேற் குறிப்பிட்ட வரலாற்று நூலுக்கு உதவும் வகையில் தந்தை பற்றிய ஆவணங்கள், வெளியீடுகள், பத்திரிகைக் குறிப்புகள், புகைப் படங்கள் போன்றவற்றை எமக்கு அனுப்பி உதவுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

மேதகு ஆயர். சு. ஜெபநேசன்
தலைவர்.

பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்
செயலாளர்.

தொடர்பு முகவரி:
செயலாளர்,
தந்தை செல்வா அறங்காவற்குழு
35, நெல்லியடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (யாழ்ப்பாணம்)

[3549]


சந்திரகாசன் இலங்கை வருகை:

## கூட்டணி தலைமைப் பீடத்தில் மாற்றத்தை உண்டாக்கும்?

(கொழும்பு)

தந்தைசெல்வாவின் புதல்வரும், இலங்கைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவருமான சந்திரகாசன் தனது 17 வருடகால அரசியல் அஞ்ஞாத வாசத்தை முடித்துக் கொண்டு விரைவில் இலங்கை வரவுள்ளார்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அமிர்தலிங்கத்தின் மனைவி திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் கொழும்பு [illegible] கக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன,

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இருமுக்கியஸ்தர்களின் இலங்கை வருகை கூட்டணியின் தலைமைப் பீடத்தில் புதிராகவே இருப்பதாகவும் இதன் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைத்துவத்தில் பெரும் மாற்றம் காணப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

## விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் வகையில் மாணவரிடையேபோட்டிகள்

[யாழ்ப்பாணம்]

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன்யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே விஞ்ஞானப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இந்த வகையில் கட்டுரைப் போட்டி, வினாவிடைப் போட்டி எழுத்துப் பரீட்சை மற்றும் பேச்சுப் போட்டி என்பன இவ் வருடம் நவம்பர் மாதத்திலும், வினா விடை இறுதிப் போட்டியும் விஞ்ஞான கண்காட்சியும் அடுத்த வருடம் ஜனவரியிலும்நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்லூரிகளுக்கான விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டம் 2001- 2002 இன் கீழ் நடத்தப்படும் இப் போட்டிகள் நடைபெறும்தினங்கள். இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் கலாநிதி அ. செந்தூரன், உதவிச் செயலாளர், யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம், மே/பா உயிர் இரசாயனத்துறை மருத்துவ பீடம், யாழ். பல்கலைக் கழகம் திருநெல்வேலி எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-106)

## ப௫. ப. நோ. கூ. சங்க பணியாளர் வேலை நீக்கத்தை இரத்துச் செய்ய பணிப்பு

(புலோலி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் வேலை நீக்கம் செய்யப்பட்ட பொதுமுகாமையாளர், வர்த்தக முகாமையாளர் ஆகியோருக்கு உடன் வேலையை வழங்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருக்குப் பணித்துள்ளது.

இப் பணியாளர்களுக்கு சங்கத்தினால் வழங்கப்பட்ட தண்டனையான வேலை நீக்கம் பொருத்தமற்றதாகக் காணப்பட்டுள்ளதாகவும் மேற்படி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 98 ஆம் ஆண்டு குறித்த உத்தியோகத்தர்களும் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். பின்னர் இவர்களுக்கு எதிராக நடைபெற்ற ஒழுக்காற்று விசாரணைகளையடுத்து இருவரும் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

இதன்பின்னர் இருஉத்தியோகத்தர்களும் கூட்டுறவு ஊழியர்ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்ததையடுத்து மேற்படி பணிப்புரைவிடுக்கப்பட்டுள்ளது. (உ-52)

## கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(மந்திகை)

சிறுவர்கள் உரிமை தொடர்பான மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதிவியாழக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறுமென செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [செ-23]

## அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

சென்-ஜோன்ஸ்அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவின் தீவக வெளிவாரிப் பிரிவின் அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வின் படைப் பிரிவின் மாவட்ட ஆணையாளர் எஸ். செல்வரஞ்சன், தீவக உதவி மாவட்ட ஆணையாளர் இ. அசோகன், நல்லூர் படைப் பிரிவின் படை அததியட்சகர் க. பிரசாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-104

## முதலாவது கூட்டம் 24 இல்

(கொழும்பு)

ஜே. வி.பி.யின் ஆதரவுடன் 20 பேர் கொண்ட அமைச்சரவை அமைக்கப்பட்டபின், அதன் முதலாவது கூட்டம் இம் மாதம் 24 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது நடைபெறவிருப்பதாக ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி கூட்டம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமெனக் கருதப்படுகிறது. (வ)

## காணாமற் போனோர் பற்றிய விசாரணை; உறவினர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில்யாழ். குடாநாட்டில் இருந்து காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர், பின்வருவோர் தொடர்பான விசாரணைக்காக அவர்களின் உறவினர்கள், மற்றும் சாட்சிகள கிராம சேவகர்களை யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு சாட்சிகளை வழங்குமாறு கேட்டுள்ளனர்.

★சின்னத்தம்பி ஞானேந்திரன் (கோ. இல. பி-83) கரவெட்டி.

சாட்சி:-பரமலட்சுமி

★ இமானுவேல் மரிய ஜெயசீலன் (கோ. இல. பி-29) பாடசாலை-வீதி, நாவற்குழி, கைதடி.

சாட்சிகள்:-பூ ஜீவபாலன், பலாலி-வீதி. கோண்டாவில் கிழக்கு, க. சிறிதரன் ஜே/295 நாவற்குழி கிழக்கு கிராமசேவகருக்கு அழைப்பு

★ தங்கவேலு சந்திரகுமார் (கோ. இல. பி-30) 28, உப்புக்குளம்-வீதி கொழும்புத்துறை.

சாட்சிகள:- ஸ்ரீபஸ் முதலாளி, ச.பராசக்தி.

★ பத்மநாதன் சுதர்சன் (கோ. இல. பி-56) நுணாவில் மேற்கு. சாவகச்சேரி.

சாட்சிகள்:- சுவாமிநாதன் சிவநாதன் சின்னத்தம்பி மகேந்திரராசா, சின்னராசா கேசவன் அல்வாய், மற்றும் நுணாவில்மேற்கு கிராம சேவகர்களுக்கு அழைப்பு

★ இரத்தினசிங்கம் ராஜ்குமார் (கோ. இல. பி-61) கைதடி கிழக்கு.

சாட்சிகள்:-ஜே. மோகன், சாந்தகுமார், செல்லையா ஜெயபாலசிங்கம். (உ-10)

## பயன் தரு மரக்கன்றுகள் நாட்டல்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக வளவில் பயன் தரு மரக்கன்றுகள் நேற்று முன்தினம் நட்டப்பட்டன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலரும் மற்றும் உத்தியோகத்தர்களும் இணைந்து இம் மரம் நடும் நிகழ்வை மேற்கொண்டனர். (உ-120)

மோதல் தவிர்ப்பைக் கடைப்பிடிக்க

## அரசு, புலிகளுக்கு யுனிசெவ் கோரிக்கை

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கில் போலியோ சொட்டு மருந்து வழங்கும் செயற்பாட்டை தடையின்றி மேற்கொள்ள அரசும் விடுதலைப்புலிகளும் மோதல் தவிர்ப்பைக் கடைப்பிடிக்குமாறு யுனிசெவ் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இம் மாதம் 22 ஆம் திகதியும் அடுத்த மாதம் 20 ஆம் திகதியும் போலியோசொட்டு மருந்து வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்தடிசில்வாவிற்கும் விடுதலைப்புலிகளின் வன்னி தலைமையகத்திற்கும் எழுத்து மூலமான கடிதமொன்றை யுனிசெவ்வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அலன்பானி அனுப்பி வைத்துள்ளார். (உ-4)

## வவுனியாவில் கடும்மழை 45 மீள்குடியேற்ற வீடுகள் சேதாரம்

(வவுனியா)

வவுனியாவின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் பெய்த கடும் மழைகாரணமாக தரணிக்குளம், மறவன்குளம் பகுதிகளில் அண்மையில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 45 வீடுகள் சேதமடைந்துள்ளன.

தரணிக் குளத்தில் இருபது வீடுகளும், மறவன் குளத்தில் இருபததைந்து வீடுகளும் இவ்வாறு சேதமடைந்துள்ளன. இதனால் இங்கு வசித்த மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர். (செ)

## அரச அதிபராக புதியவர் நியமனம்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையின் 1ஆம் வகுப்பைச் சேர்ந்த எஸ். சண்முகம் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து மட்டக்களப்பு மாவட்டச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (உ)

## விபத்தில் சிக்கியவர் காயம்

(மந்திகை)

மோட்டார் சைக்கிள் ஐஸ்கிறீம் வான் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவர் காயமடைந்தது பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் ஆவரங்கால்சந்தியில் இடம்பெற்றஇச் சம்பவத்தில் உடுப்பிட்டியைச் சேர்ந்த வி. நிரஞ்சன் [வயது 48 ]என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். [செ-23]

## அம்புலன்ஸ் சேதம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதியும், நாவலர் வீதயும் சந்திக்கும் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றவிபத்தில் யாழ்.போதனா வைத்திய சாலை அம்புலன்ஸ் சேதமடைந்துள்ளது.

சாரதிப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தயாழ்.போதனாவைத்தியசாலையின் அம்புலன்ஸ் மீது நாவலர் வீதியால் வந்த கார் மோதியதில் அம்புலன்ஸ் மற்றும் கார் என்பன சேதமடைந்துள்ளன. (உ-10)

## மூளைக் காய்ச்சலால் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் மூளைக்காய்ச்சல் காரணமாக மரணமாகியுள்ளார்.

அரியாலையைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக ஊழியரான ச.பூநாதன்(வயது52) என்பவரே மரணமானவர் ஆவார்.

இவர் கடந்த இருவார காலமாகச் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டநிலையில் நேற்று முன்தினம் மரணமானார். (உ-106)

## கல்வியியற் கல்லூரிகளிடையில் சமாதானத்தை வலியுறுத்தும் நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

தேசிய ஒருமைப்பாட்டுப் பணியகத்தினால் கல்வியியற் கல்லூரிகளுக்கு இடையில், சமாதானத்தை வலியுறுத்தும் நாடக ஆற்றுகை சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டமொன்று அடுத்த மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளில் மகரகமவில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களும் பங்கு கொள்ளவுளளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் முதலாவது நிகழ்ச்சித்திட்டம் ஹட்டனில் நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. உ-106)

## விபத்தில் மாணவி படுகாயம்

(சுழிபுரம்)

சித்தன்கேணிச்சந்தி பாரதி கல்வி நிலையம் முன்பாக கடந்த வெள்ளியன்று மதியம் இடம்பெற்ற கார் விபத்தில் அகப்பட்ட கலைமுதற்தேர்வு மாணவி படுகாயமடைந்த நிலையில் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிற்றூர்தியில் வந்து இறங்கிய அராலியைச்சேர்ந்த பிரதீபா (வயது 21) என்ற மேற்படி மாணவியை யாழ்ப்பாணத்தில் இருந்து மூளாய் நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருந்த கார் மோதியதாகத் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சிற்றூர்தி, கார் என்பன மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன. (உ-ப-10)

## விளையாட்டு விழா

[மந்திகை]

கன்பொல்லை இராஜ கிராமம் பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று 2 00 மணிக்கு இராஜ கிராமம் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலைய தலைவர் சு. வசீகரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், திக்கம் வடிசாலை பொது முகாமையாளர்ப.இரவீந்திரன் பிரதேச சபைச் செயலாளர் சி. பசுபதி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். [செ-23]

## கணனிக் கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

(அரியாலை)

வலி.கிழக்கு பிரதேச சபை தகவல் தொழில் நுட்பப் பூங்காவுடன் இணைந்து நடத்தும் கணனிப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சான்றிதழ் பயிற்சிநெறி,டிப்ளோமா பயிற்சி நெறி என இரு பிரிவுகளாக குறைந்த கட்டணத்துடன் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி நெறியைக் கற்க விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்களை வலி.கிழக்கு பிரதேச சபை,தலைமை அலுவலகம்,நீர்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும் விண்ணப்பமுடிவு இம்மாதம் 25 ஆம் திகதியாகும். (உ-106)

## ப.நோ.கூ.ச. கிளை மூடப்பட்டது

(மானிப்பாய்)

சண்டிப்பாய் சீரணிச் சந்தியில் இயங்கி வந்த யாழ் ப.நோ. கூ. சங்கத்தின் கிளை நிலையம் மூடப்பட்டுள்ளது.

நிவாரணம் வழங்கும் வேளையில் மட்டும் இது திறக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-120)

## கட்டாக்காலிகள் தொல்லை அதிகரிப்பு

(மானிப்பாய்)

நவாலி ஆனைக்கோட்டை பகுதிகளில் கட்டாக்கால் ஆடு,மாடுகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகப் பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இரவு வேளையில் குடியிருப்பாளர்களின் வளவுகளுக்குள அத்துமீறி புகும் இக்கட்டாக் காலிகள் அங்குள்ள பயன் தரும் பயிர்களை அழித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். [உ-120]

## பருத்தித்துறையில் நவீன மீன் சந்தை

(புலோலி)

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் உள்ள சென் தோமஸ் கடற் கரைச் சந்தியில் சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் புதிய நவீன வசதி கொண்ட மீன் சந்தை ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளைப் பருத்தித்துறை நகர சபை மேற் கொண்டுள்ளது. (செ-52)

## தென்பகுதியில் 8 மணிநேர மின் வெட்டு

(கொழுமபு)

கொழும்புஉட்பட தென்பகுதியில் நேற்று முதல் எட்டு மணிநேர மின்வெட்டு அமுல் படுத்தப்பட்டதாக இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

நீரேந்து பகுதிகளில் தொடர்ந்து நீர்மட்டம் குறைவடைந்துவருவதனாலேயே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுழற்சி முறையில் மேற்கொள்ளப்படும் இம் மின்வெட்டு முறை நீரேந்து பகுதிகளில் மழை பெய்யும்வரை தொடரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

## பொறுப்பற்ற இளைஞர்களால் தொல்லை

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதி தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் முன்பாக கூடும் இளைஞர்கள், அங்கு கல்வி கற்கும் மாணவிகளுக்குத் தொடர்ந்தும் தொல்லை கொடுத்துவருவதாக பெற்றோர் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தக்க வகையில் தடுத்து நிறுத்தும் ஆயத்தங்களில் முற்போக்கு எண்ணங் கொண்ட இளைஞர்கள் சிலர் ஆயத்தமாகி வருவதாகவும் அறியப்படுகிறது. (உ-41)

# செய்தித் துளிகள்

## கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

துணைவேந்தர் நல நிதியக் கொடுப்பனவு இரண்டாம் தவணைப் பணம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி நிதி உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட மாணவர்களுக்கான கொடுப்பனவுகள், கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் வழங்கப்படுவதாகவும்;

உரியமாணவர்களை தவறாது உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறும் நலச்சேவைகள் உதவிப்பதிவாளர் கேட்டுள்ளார். (உ-106)

### பொறியியலாளர்
## நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிமனைக்கு ஒப்பந்த அடைப்படையில் பொறியியலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு நியமனம் பெற்ற ரட்ணம் சண்முகநாத நடேசரைஉடனடியாகப் பதவியினை ஏற்றுக் கொள்ளுமாறு ஆளுநர் பணித்துள்ளார். (உ-10)

## புதிய கட்டடம் நிர்மாணிப்பு

(புலோலி)

பருத்தித்துறை சென். தோமஸ் மகளிர் கல்லூரிக்கு சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கல்லூரி அதிபர் அருட்செலவி எஸ். அவரனீறறா தலைமையில் நடைபெற்றது;

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீ ரங்கேஸ்வரன் சம்பிரதாய பூர்வமாக அடிக்கல்லை நாட்டி வைத்தார். (செ-52)

### களஞ்சியப் பிரிவு
## திறப்பு

(புலோலி,

பருத்தித்துறை நகரசபையின் களஞ்சியப் பிரிவு நகரசபைத் தலைவர் வின்சென்ற் கெனடியால் திறந்து வைக்கப்பட்டது.

பருததித்துறை 3ம் குறுக்குத் தெருவில் முன்னர் மீன் சந்தை இயங்கிய இடத்திலேயே இககளஞ்சியப் பிரிவு அமைந்துளளது. (உ- 52)

## பாரிய விருட்சங்கள் அழிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப்பகுதிக்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கையின் பொருட்டு அங்குளள பயன்தரு பாரிய விருடசங்கள பலவும் வெட்டி அழிக்கப்படுவதாகத் தெரிய வநதுள்ளது, (உ-75)

## நன்றித் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

மரியாயின் சேனை தனது 80 வது ஆண்டை ஓம் மாதம் 7 ஆம் திகதியுடன் பூர்த்தி செய்ததை யொட்டி நன்றி செலுத்தும் வகையில் இன்று யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (உ)

### அதிபர்களுக்கான
## கூட்டம்

[மந்திகை]

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப 2.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். [செ-23]

### படைத்தரப்பில் ஒருவர்
## உயிரிழப்பு

(வவுனியா)

மன்னார் அடம்பன் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் இரு படையினர் காயமடைந்துளளனர்.

கடந்த வியாழன் இச்சம்பவம் இடம் பெற்றது.

இம் மோதலில் ஒரு எல்லைப் படை வீரர் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர். [ந-4]

## கணனி அன்பளிப்பு

வடபிராந்தியபோக்குவரத்துச் சபையில் இதுவரை காலமும் நிலவி வந்த கணனி இல்லாக் குறைபாடு நீக்கப்பட்டுள்ளது.

மேற்படி குறைபாட்டை, ஒரு தொகுதி கணனியை வழங்கி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிவர்த்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது; (உ)

### விபத்தில் சிக்கி
### மூவர் காயம்

யாழ். நாவலர் வீதியும், பிறவுண் வீதியும் சந்திக்கும் பகுதியில் கடந்த வியாழன் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் சிக்கிக்காயமடைந்தநிலையில் மூவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாள் வீதி கொக்குவிலைச் சேர்ந்த கே. கோமதி (வயது 24) கே. ராஜேஸ்வரி [வயது 25] யாழ்ப்பாணம் மீகாணாந்தோட்டத்தைச் சேர்ந்த எஸ். சுதர்சன் [வயது 43] ஆகியோரே காயமடைந்தவர்களாவர். [உ-104,10]

## கால் இறுதி ஆட்டங்கள்

(சுண்டுக்குளி)

புனிதமரியன்னைபேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கம்அமபர் அருட்திரு ஜெபநேசன் அடிகள் ஞாபகார்த்தமாக பேராலய விளையாட்டரங்கில் நடத்தி வரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி தொடரில் கால்இறுதி ஆட்டங்கள் இரண்டு கடநத வியாழனன்று இடம்பெற்றன;

முதலாவது இடம் பெற்ற ஆட்டத்தில் சென்நீக்கிலஸ் அணி அதனைஎதிர்தது ஆடிய பாசையூர் சென் அன்ரனீஸ் அணியை 2 நேர் செற்றுகளில 15:12, 15:10 என்ற புளளிகள் அடிப்படையில் வென்று அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் கொழும்புத்துறை ஜெற்லைன் விளையாட்டு கழக அணி அதனை எதிர்த்து ஆடிய சுண்டுக்குளி கிறீன் பீல்ட் அணியை 02நேர் செற்றுகளில் 15, 10: 15: 08 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதி ஆட்டத்திற்குத்தகுதிபெற்றது. (உ-110)

### வன்னிப்பகுதிக்குச் செல்வோர்,
# செல்லுமிடத்தை மாறிக் குறிப்பிடின் பயண அனுமதி மறுக்கப்படும்

### பல்கலை, கலாசாலை மாணவர்க்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப்பகுதிகளுக்குச் செல்ல விரும்பும் பல்கலைக் கழக மாணவர்கள், அரச ஊழியர்கள், ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் ஆகியோர் கப்பல் பதிவின் போது தாம் செல்லவிருக்கும் வன்னிப் பகுதியைக் குறிப்பிட்டே பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா ஊடாக வன்னிப் பகுதிக்கு செல்பவர்களுக்கான பிரயாண அனுமதி நடைமுறைகள் குறித்து, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலருமான கே. கணேஷ், யாழ் அரச அதிபர் கே. சண்முகநாதனுக்கு அனுப்பி வைத்த கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மேற்குறிப்பிட்ட நடைமுறைகளைத் தவிர்த்து தாம் செல்லுமிடம் திருகோணமலை அல்லது கொழும்பு எனப் பதிவு செய்தால் அவர்களுக்கு வன்னி செல்வதற்குப் பாதுகாப்புப் படையினரால் அனுமதி மறுக்கப்படும்.

இந் நடை முறை பொது மக்களுக்கும் ஏற்புடையதாகும். கப்பல் பதிவினை மேற்கொள்ளும்உத்தியோகத்தர்களும் இதனை அனுசரித்தே பதிவைமேற்கொள்ள வேண்டும்;

அத்துடன் வன்னி செல்ல வருபவர்கள் திருகோணமலையில் தங்க நேரிட்டால், அக்காலப் பகுதியில் திருகோணமலையில் இருப்பதற்கான பொலிஸ் பதிவினைச் செய்தல் வேண்டும் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர், கோப்பாய், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுளளன. (உ-106)

## இராசி பலன்

16. 9. 2001
ஆவணி 31 ஞாயிறு
சதுர்தசி மு.இ. 7.15 வரை
மகம் பி. பகல் 12.20வரை
இராகுகாலம் 4 33-6 03
நல்லநேரம் 9.03-10.33
மரணயோகம்

**மேடம்**
தொழில் நன்மை, தாழ்வு நிலை, மனக்கிலேசம், காரிய தாமதம்;

**இடபம்**
அற்பர்உறவு, கல்விச்சிறப்பு உறவினர் மனஸ்தாபம், நிலை மாற்றம்;

**மிதுனம்**
கூட்டு முயற்சி, பிரயாணம் இனியசம்பவம் தனவரவு,

**கடகம்**
உணர்ச்சிவசப்படல், காரிய தாமதம், மாதர்நட்பு, பொருள விரயம்

**சிங்கம்**
உஷ்ணவியாதி, நண்பர் உதவி, நலல முயற்சி, சுபலாபம்.

**கன்னி**
காரிய தாமதம், பிதா சிந்தை, சுபசெலவு, கௌரவக் குறைவு.

**துலாம்**
நினைத்தகாரியம் நிறைவேறும், நல்லவரவேற்பு, பொருள சேர்க்கை, குடும்ப சுகம்.

**விருச்சிகம்**
காரிய நட்பு, தொழில் சிறப்பு, மேன்மை அடைதல், சுபநிகழ்ச்சி.

**தனுசு**
பரியம், நிலைமாற்றம், மனச்சஞ்சலம், புதியதிட்டம்.

**மகரம்**
துயரம், வீண்தொல்லை, போசன சுகம், பிரயாண பயம்.

**கும்பம்**
வாகனவசதி, நண்பர்கள் சநதிப்பு, முயற்சி நன்மை, விருநதுபசாரம்.

**மீனம்**
காரிய அனுகூலம், மன மகிழச்சி, தொழில்விருத்தி, மேன்மை.

[பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது]

வளவன்-

### 13வயதிற்குட்பட்டமாணவர்க்கான
## கிரிக்கெட் சுற்றுப்போட்டி விண்ணப்பமுடிவு20ந்திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் இவ்வருடம் முதன் முறையாக 13 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

இப்போட்டிகளில் 14 பாடசாலைகள்பங்குபற்றவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 20ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னனதாக சகாயராஜா, சங்கச் செயலாளர், சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது;

அன்றையதினம் 4 30 மணிக்கு அணி ஒழுங்குத் தெரிவு மேற்படி சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கான முழு அனுசரணைகளையும் பனை அபிவிருத்திச்சபை வழங்கவுள்ளது.

இதேவேளை யாழ் மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கமும் 13 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான இறுதிப்போட்டிகளை இம்மாத முடிவுக்குள் நடத்த ஒழுங்குகளை செய்துள்ளதாக மேற்படி இரு சங்கங்களினதும் தலைவர் க. இராஜதுரை தெரிவித்துள்ளார்; (ந)

## சர்வதேச சிறுவர் தின ஏற்பாடுகள் தீவிரம்

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர் பிரிவில் எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர்தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக பிரதேசசெயலர்தெரிவித்துள்ளார்.

சமூக சேவைத் திணைக்களமும் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன;

இந்நிகழ்வையொட்டி வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் சிறுவர்களே எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள் என்ற தலைப்பில் கவிதைகட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது; (உ-23)

### கசிப்பு உற்பத்தியாளர்களிடம்
## 1 இலட்சத்து 24 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவீடு

(துன்னாலை)

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்கான கோடா வைத்திருந்த குற்றத்துக்காக கடந்த மாதத்தில் வடமராட்சிப் பகுதியில் 1 இலட்சத்து 24 ஆயிரத்து 750 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது;

வல்வெட்டித்துறை, துன்னாலை, ராஜகிராமம், அல்வாய், தொண்டைமானாறு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தி, விற்பனை தொடர்பாக நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு அவர்களிடமிருந்தே மேற்படி தொகை தண்டப்பணமாக அறவிடப்பட்டது.

வடபிராந்திய மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி ஆர். எஸ். றொசன் சஞ்சேறாஜு இவ்வாறானவர்களை இனம்காண்பதில் முழு முனைப்புடன் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-41)

### 18 இலட்சரூபா செலவில்
## 36 மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள்

வடமராட்சி கிழக்கு மீனவர்கள் 360 பேருக்கு பட்டினிக்கெதிரான நிறுவனம் 18 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை வழங்கவுள்ளது.

ஒவ்வொரு மீனவருக்கும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் கிடைக்கவுள்ளன;

யாழ். கடற்றொழில் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (உ-52)

## இன்று ஒரு தகவல்

# பழக்கம் பொல்லாதது

பழக்கம் பொல்லாதது: அதை மாற்றுவதென்பது இலகுவானதொன்றல்ல: இப்பழக்கம் சிலருடன் கூடப் பிறக்கலாம். அல்லது இடையில் வந்துசெருகியிருக்கலாம். அப்பழக்கம் வாழ்க்கையில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கலாம். ஒருவனின் பண்பையும் ஆளுமையையும் புடம்போட்டுக் காட்டலாம். இதைக் கொண்டே பழந்தமிழ் இலக்கியங்களில் தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்ற பழமொழியும், புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்ற பழமொழியும் முன்வைக்கப்பட்டிருக்கலாம். ஆயினும்சமகாலத்தில் பழக்கத்தைப் போக்கும் மாத்திரையாக வழிகாட்டலும், ஆலோசனையும் முன்வைக்கப்பட்ட போதிலும் இது முழுமையாக வெற்றியளிக்கும் எனக் கூறுவதற்கில்லை; அதை விட மதமாற்றம் கூட இதற்கு இன்றொரு மாத்திரை போல உலா வருகின்றது; எனினும் அனுபவம் தந்த பாடத்திலொன்று பழக்கம் பொல்லாதது என்பதை விளக்க பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசக் கதைகளில் ஒன்று.

ஐந்து பெண்கள் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்துக்கு மீன் வியாபாரத்துக்காக மாலை நேரங்களில் சென்று விடுவது வழக்கம். ஒரு நாள் வியாபாரம் முடிந்து தங்கள் கிராமத்துக்குப் புறப்படுவதற்கிடையில் திடீரென பயங்கர மழை. அன்று அமாவாசை, மழை இருட்டுஒருபுறம், அமாவாசை இருட்டு மறுபுறம்; என்றாலும் பற்றைகளையோரமாகக் கொண்ட சரடு முரடான பாதையில் மெதுவாகச் சென்றுகொண்டிருந்தார்கள். இரண்டு கிராமங்களுக்கு மிடையேயுள்ள பாதையில் வீடுகள் குறைவு. பாதிவழியில் ஒரு பிராமணருடைய வீடு இருந்தது. அப்பெண்கள் அவருடைய வீடு சென்று தாங்கள் இரவு தங்குவதற்கு இடம் தருமாறு கேட்கவே, பிராமணரும் பெரு மனதுடன் அவர்களை வரவேற்று மீன் கடகங்களையும் தட்டுக்களையும் ஒதுக்குப் புறமாக வைக்குமாறு கூறி, தனது வீட்டு விறாந்தையில் படுப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து, இரவு உணவையும் கொடுத்தார். அதன் பின்பும் மழைவிடாமல் பெய்து கொண்டிருக்க எல்லோரும் இரவு நித்திரைக்குச் சென்றனர்.

பிராமணருடைய வீட்டில் அத்தர்வாசனைசாம்பிராணி, கற்பூரவாசனை, பழவாசனை, பூவாசனை என்பன கமகமவென நறுமணம் வீசத் தொடங்கவே இவ் வாசனை பெண்களுக்கு குமட்டத் தொடங்கியது. நீண்ட நேரமாகத் தூக்கமும் வர மறுத்தது. ஒரு பெண் மெதுவாக எழுந்து சென்று பிராமணருக்குத் தெரியாமல் தங்கள் மீன் தட்டுக்களை எடுத்து வந்து எல்லோருக்கும் கொடுக்க அவர்கள் அவற்றைத் தலைச்குக் கீழே வைத்துப் படுத்தனர். அதிலிருந்து வந்த மீன் வாசனை இவர்களுக்கு நிம்மதியான நித்திரையைக் கொடுத்தது.

இதிலிருந்து எது எப்படியிருந்த போதும், பழக்கமே வாழ்க்கையுடன் ஒன்றித்து விட்டது என்பதை அறிந்து கொள்ளலாம். சிகரட் பிரியர் ஒருவருக்கு சாப்பிட்ட பின் சிகரெட் புகைத்தாலே உணவு சமிபாடடையும் என்ற பிரேமை. இது போன்றே தாம்பூலமும் கூட: சிலருக்கு சுருட்டுக்குடித்தாலே மலங்கழியும் என்ற பிரேமை. இது போன்றே பல பிரேமைகள் நிஜங்களாக பழக்கங்களோடு தொடர்புடையவையாக உள்ளன. எனவே சம காலத்தில் பழக்கத்தை இலகுவில் முற்றாக மாற்ற முடியாதுஎன்பது முற்றிலும் உண்மை.

மு. விக்னேஸ்வரன்
கோப்பாய்

# போதிய வசதிகளின்றி கோப்பாய் ஆசிரியகலாசாலைமாணவர் அவதி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை ஆசிரியமாணவர்கள் தமது பயிற்சியைப் பெறுவதில் பாரிய சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்:

விரிவுரையாளர் பற்றாக்குறை, தளபாடப்பற்றாக்குறை, விரிவுரை மண்டப நெருக்கடிகள் மலசலகூட வசதிகள் திருப்தி கரமாக இல்லாமை போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு தாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக மாணவப் பிரதிநிதிகள் எமது செய்தியாளரிடம் கவலை தெரிவித்தனர்.

500 மாணவர்கள் பயிற்சி பெறும் இக் கலாசாலையில் 25 க்கு மேற்பட்ட விரிவுரையாளர்கள் தேவையான நிலையில் தற்போது 11பேரே கடமையாற்றுகின்றனர்.

இதேவேளை உயர் கல்வி அமைச்சின் ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கிலை, தற்போது பாடசாலைகளில் கற்பிற்கும் ஆசிரியர்களில்இருந்து விரிவுரையாளர்களை பகுதி நேர விரிவுரையாளர்களாக பாடசாலைமுடிவடைந்தபின் கடமையாற்ற அனுமதி அளித்துள்ள போதிலும் அது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் மேற் கொள்ளப் படவில்லை.

இதனால் எதிர்கால மாணவ சமூகத்திற்கு கடமையாற்றச் செல்லும் தமது கல்வி பெரிதும், பாதிக்கப் படுவதாகவும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர்:

மேலும், கற்பித்தல் பயிற்சிகளை கண்காணிப்பதற்கு 50 மாணவர்களுக்கு ஒரு விரிவுரையாளர் என்ற வகையில் நியமிக்கப்படுவதனால் குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு செல்லும் ஆசிரிய மாணவர்களுக்கு முழுமையான பயிற்சியை வழங்க முடியாது விரிவுரையாளர்களும் பல்வேறு சிரமங்களைஎதிர்நோக்குகின்றனர்.

இதனால், தாங்கள் பூரண பயிற்சியைப் பெறமுடியாத துர்ப்பாக்கிய சூழ்நிலை உருவாகிவருவதாகவும் மாணவப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்;

(உ-106)

## முதியோர்தின கட்டுரைப் போட்டி

(மந்திகை)

முதியோர் தினத்தையொட்டி, தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்தும் மாணவர்களுக்கானகட்டுரைப்போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

வடமராட்சியில் தங்கியுள்ள மாணவர்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், பளை மத்திய கல்லூரி ஆகியவற்றிலும், வலிகாமத்தில் தங்கியுள்ள மாணவர்கள் இணுவில் மத்திய கல்லூரியிலும் இப்போட்டியில் பங்கேற்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டத்திலான கட்டுரைப் போட்டியில் முதல் இரு இடங்களையும் பெறும் மாணவர்களது பெயர் விபரங்களை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்பாக கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ; செல்வராசா அறிவித்துள்ளார்.

(உ-23)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(அரியாலை)

திருநெல்வேலி மத்திய விளையாட்டுக் கழகம் 9 வீரர்கள் பங்குகொள்ளும் 15 ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடாத்த உள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவு தினம்இம்மாதம் 25 ஆம் திகதியாகும். (உ-160)

## அதிபர்களுக்கான கூட்டம் நாளை

(உடுவில்)

எதிர் வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்ட உடுவில் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட் கிழமை பி. ப 2. 00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறுமென உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்; (உ-129)

## தொண்டையில் ஆணி சிக்கியது

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியில் வர்ணம்பூசும் வேலையில் ஈடுபட்டிருந்த சமயம் கேற்றிலில் இருந்த தண்ணீரைக் குடித்த வேளை கேற்றில்கைபிடியில் இருந்த ஆணி தொண்டைப் பகுதியில் சிக்கிக் கொண்ட நிலையில் இளைஞர் ஒருவர் யாழ் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன் தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் பொன்னுத்துரை செலஸ்ரீன் (வயது-27) என்ற அச்செழு நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த இளைஞனே வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ந-10)

## யுனிசெவ் ஏற்பாட்டில் கட்டாயக் கல்விக்கான பிரசாரம் இரு தினங்கள்

(யாழ்ப்பாணம்)

சகல பிள்ளைகளினதும் உரிமையான கல்வியை அனைவரும் பெறவேண்டும்என்னும் நோக்கில் யுனிசெவ்நிறுவனம் இம் மாதம் 21 ஆம் திகதியையும் வரும்மாதம் 19ஆம்திகதியையும் கட்டாயக் கல்விக்கானபிரசார தினங்களாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

இந் நாட்களில் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளைப் பாடசாலைக்குச் செல்ல வைப்பதும் வரவு ஒழுங்கீனமான பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலைக்கு வரச் செய்வதுமான கருப்பொருளைக்கொண்டமைந்த மாணவர் கலை நிகழ்வுகளை ஏற்பாடுசெய்யும் படியும்,

இந் நிகழ்வுகளிற்கு பெற்றார் மற்றும் கிராம சேவை அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமாதானநீதிவான்கள், கிராம முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அழைக்கப்பட வேண்டும் எனவும் தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் சகல தீவக வலயப் பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். (உ)

## தலைமைத்துவப் பயிற்சி

யாழ்மாவட்டஒன்றிணைந்த கூட்டுறவு மகளிர் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ்பெண்களுக்கானதலைமைத்துவப் பயிற்சி நேற்றுத் தொடக்கம் 19 ஆம் திகதி புதன்கிழமை வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மகளிர் தலைவி திருமதி.ரதி சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (வ-5)

# மதுவரி அத்தியட்சகராக ஆறு பேர் தெரிவு

## மூவர் யாழ். மாவட்டத்தவர்

(துன்னாலை)

யாழ். மாவட்டத்தில் இருந்து மதுவரி அத்தியட்சகர் தெரிவுக்கானதகுதிகாண் எழுத்து மூலப் பரீட்சைக்கு தோற்றிய 14 பேரில் மூவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

வடபிராந்திய மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி ஆர். எஸ். றாஜு, என். சோதிநாதன், எஸ். செந்தூர்ச்செல்வன் ஆகியோரேதெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

இதேவேளை, அகில இலங்கை ரீதியில் இடம் பெற்றமேற்படி பரீட்சைக்கு 76 பேர் தோற்றிய போதிலும் 6 பேர் மாத்திரமே தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது; (உ-41)

## உடைந்த பாடசாலை கட்டடங்களில் திருடர் கைவரிசை

(தென்மராட்சி)

தென்மராட்சியிலுள்ள மட்டுவில் சரஸ்வதி மகாவித்தியாலயம், மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் மற்றும் கைதடி, நுணாவில் அ.த.க. பாடசாலை போன்றவற்றின் உடைந்த கட்டடங்களில் காணப்படும் தீராந்திகள் மரங்கள், கதவுகள் மற்றும் யன்னல்கள் போன்றவற்றினை திருடர்கள் பட்டப் பகல்வேளைகளில்அபகரித்துச் செல்வதாகத் தெரியவருகின்றது;

இது இவ்வாறிருக்க, மட்டுவில், கல்வயல், சரசாலை மற்றும் நுணாவில்பகுதிகளில் காணப்படுகின்ற பயன்தரும் மரங்கள் விறகுத்தேவைகளுக்காகக் கண்டபடி வெட்டி எடுத்துச் செல்லப்படுகின்றன;

இதன் காரணமாகமேற்படி பகுதிகளில் சுற்றுச் சூழல் மிகவும் மோசமாகப் பாதிப்படையக் கூடிய ஏதுநிலை காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது;

தென்மராட்சிப் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதைத் தடுத்துநிறுத்த ஆவன செய்யப்படல் வேண்டும் எனப் பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது: (உ-77)

## ஆரம்பக் கல்வி செயலமர்வு

(மந்திகை)

தென்மராட்சி கல்விவலய பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி பயிற்சி செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

வலிகாமத்தில் 5 நிலையங்களிலும்வடமராட்சியில்எட்டு நிலையங்களிலும் நடைபெறும் இச் செயலமர்வில் ஆசிரியர்கள் தாங்கள் பதிவுசெய்த நிலையங்களில் கலந்துகொள்ளுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசாகேட்டுள்ளார்; (ந-5-23)

# முகத்துவார கடற்கரையில் கொழும்புத் துறைமுக வரைபடம் மீட்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவின் நிழற்படமொன்றையும் டயறி ஒன்றையும் முகத்துவாரம் கடற்கரையில் கடந்த புதனன்று சீ. ஐ. டி. பொலிஸாரின் விசேட புலன் விசாரணைப் பிரிவு கண்டெடுத்துள்ளது:

கடந்த செவ்வாயன்று இரவு வேளை மேற்படி பகுதியில் ஒரு ஆணும், பெண்ணும் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடித்திரிந்ததாக கிடைத்த தகவலையடுத்து அவ்விடம் சென்ற விசேட புலன் விசாரணைப் பிரிவு இவற்றைக் கண்டெடுத்துள்ளது:

இதனையடுத்து அச்சுற்றாடலில் நடத்தப்பட்ட தேடுதலின் போது, கொழும்புத் துறைமுக வரைபடம், மணிக்கூட்டு, 6 பற்றறிகள், வயர்ச்சுருள் ஆகியவற்றைக் கண்டெடுத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது; (உ)

# மின் உற்பத்தி நிலையங்கள் மூடப்படும் அபாயம்

[கொழும்பு]

இனி வரும் வாரங்களிலும் மழை பெய்யாது விட்டால் மின் உற்பத்தி நிலையங்களை மூடிவிடும் அபாயம் நிலவுவதாக மின்சார எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களிற்கு அருகில் உள்ள நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் ஒருவாரகாலத்திற்கு போதுமான மின்சாரத்தை மட்டுமே உற்பத்தி செய்ய முடியும் என அமைச்சு அறிவித்துள்ளது;

குளிரூட்டிகள், விளம்பரப் பலகைகள், காட்சிக் கூடங்கள், களியாட்ட விழாக்கள் போன்றவற்றிற்கு பொது மின்சாரத்தைப் பாவிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு அமைச்சு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. [செ]

# சந்தேகநபர்களை இனம்காண சகல விதத்திலும் உதவத் தயார்

## புஷ்ஷிடம் சவூதி இளவரசர் உறுதிமொழி

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் நியூயோர்க், மற்றும் வாஷிங்டன் நகரங்கள் மீது கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற விமானத் தாக்குதல்களில் சம்பந்தப்பட்டவர்களை கண்டு பிடிக்க சகல விதத்திலும் உதவத்தயாரென சவுதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் அப்துல்லா அமெரிக்காவுக்கு அறிவித்துள்ளார்.

இருந்த போதிலும் தாக்குதல் சந்தேக நபர்களை கண்டு பிடிக்கும் விடயத்தில் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம் எனவும் அப்துல்லா அமெரிக்காவை வலியுறுத்தியுள்ளார்.

தாக்குதலின் சூத்திரதாரி ஒஸாமாபின்லேடனா என்பது சவுதி அரேபியாவிற்கு மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்திற்குமே புலப்படாத விடயம் எனவே, யாராயினும் சாட்சியங்களுடன் கைது செய்வதே நன்மைபயக்கும்.

சந்தேக நபரைக் கைது செய்வதோ அல்லது மீண்டும் எதிர்த்தாக்குதல் நடத்துவதோ எதிர் விளைவைத் தரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை ஒஸாமாபின் லேடனுக்கும் சவுதிஅரேபியாவுக்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றி வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில்,

ஒஸாமாபின்லேடன் சவுதி அரேபியாவில் பிறந்தரென்பது உண்மை. ஆனால் அரச குடும்பத்திற்கு எதிராக செயற்பட்ட குற்றத்திற்காக ஒஸாமா பின்லேடனின் பிரஜா உரிமை 1994 இல் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-7)

## 4 ஆயிரம் விமான சேவைகள் இடை நிறுத்தம்

(நியூயோர்க்)

நியூயோர்க்கின் உலக வர்த்தகமையக் கட்டடங்கள் மீதும், வாஷிங்டனிலுள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகமான பெண்டகன் கட்டடம் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து சுமார் 4 ஆயிரம் விமானங்கள் சேவையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஜெனிவாவிலுள்ள சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கம் வெளியிட்டுள்ள தகவல் ஒன்றில், அமெரிக்காவில் மட்டும் 4 ஆயிரம் விமானங்கள் சேவையில் ஈடுபடவில்லை என்று தெரிவித்துள்ளது.

இதனால் விமானப் பயணிகள் பெரும் அவலத்தை எதிர் கொண்டுள்ளனர். (வ)

## சிவாஜியின் சுயசரிதை விரைவில்வெளியிடப்படும்

(சென்னை)

நடிப்புலக மேதை சிவாஜி கணேசனின் சுயசரிதை விரைவில் வெளியிடப்படவுள்ளதாக இவரின் மூத்த மகன் ராம்குமார் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஒக்டோபர் 1-7 ஆம் திகதி வரை சிவாஜி விழாவாககொண்டாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிவாஜி கணேசனின் 75வது பிறந்த தினமும், அவர் சினிமாவில் நடிக்கத் தொடங்கி 50 வது ஆண்டு பொன்விழா ஆண்டும்ஒ ரேதினத்தில்வருகிறது இதைபெரிய விழாவாகக்கொண்டாடத்தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## அமெரிக்காவுடன் எகிப்தும் ஒத்துழைக்கும்

(கெய்ரோ)

பயங்கர வாதத்துக்கு எதிராக அமெரிக்காவுடன் ஒத்துழைக்கப் போவதாக எகிப்து அறிவித்துள்ளது.

அமெரிக்காவில் நடந்த தாக்குதலுக்கு நியாயமான முறையில் பதிலடி கொடுக்கப்பட வேண்டும் என்று எகிப்தின் ஜனாதிபதி டுபாரக்தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி டுபாரக் மேலும் தெரிவிக்கையில்; அமெரிக்க நகர்களின் அழிவுகளுக்குப் பொறுப்பானவர்களைச் சரியாக ஆராய்ந்து அறியும் படியும் அதன் பின்பே முறையான பதிலடியை அமெரிக்கா கொடுக்க வேண்டும் என்றும் அப்பொழுது தாமும் சேர்ந்து பயங்கர வாதத்தை அழிக்க உதவப் போவதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, எந்தத் தனி மனிதனையோ, இயக்கத்தையோ, அரசையோ தகுந்த ஆதாரங்களின்றி அமெரிக்கா தாக்க முற்படக் கூடாதென்று எகிப்திய ஜனாதிபதி குறிப்பிட்டார். (து)

## சகல விதத்திலும் அமெரிக்காவிற்கு நோர்வே ஒத்துழைப்பு வழங்கும்

(ஒஸ்லோ)

அமெரிக்க நகர்களைத் தாக்கியவர்கள் மேல் அமெரிக்கா எதிர்த் தாக்குதல் நடத்தும் போது உதவி வழங்க நோர்வே முன் வந்துள்ளது.

நோர்வேயின் பாதுகாப்பு அமைச்சர் வியோரின் யோரி ஜோயோ அறிக்கையொன்றில் குறிப்பிடுகையில், நோர்வே அமெரிக்காவுடன் இணைந்து போரிடவும் தயாராக இருப்பதாகவும் எல்லா வகையிலும் அமெரிக்காவிற்குத் தேவையான உதவிகளை வழங்கப்போவதாகவும் தெரிவித்தார்.

அமெரிக்காவின் நெருங்கிய உறவு நாடாக விளங்குவது நோர்வே என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## உலகிலேயேமிகப்பெரிய விமான நிலையமூடாக கூரான பொருட்கள் எடுத்துச் செல்ல தடை

(பேர்லின்)

அமெரிக்காவில் இடம் பெற்ற தாக்குதலை அடுத்து உலகின் மிகப்பெரிய விமான நிலையமான ஜேர்மன்நாட்டு பிராங் பார்ட் விமான நிலையம் ஊடாக கூர்மையான பொருட்கள் விமானநிலையம் கொண்டுசெல்லத்தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விமான நிலையத்தினூடாக பயணிகள் 4 அங்குலக் கத்திகள் மற்றும், கத்தரிக் கோல்கள் கொண்டு செல்வது ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்தது.

அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப் பயன்பட்ட பயணிகள் விமானங்களைக் கடத்துவதற்கு கத்திகள் பயன்படுத்தப்பட்டதால் மேற்படி தடை இப்போது விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், போத்தல்வகைகள், மற்றும் கண்ணாடிகளுக்கும் தடைவிதிக்கப்பட்டுளளதாகத்தெரியவருகிறது. (உ-7)

## உலக தரிசனம்

## மத்தியகிழக்கைச் சேர்ந்தவரே 3 ஆம் உலக யுத்தத்துக்கு கர்த்தா ஆவார்

### 16 ஆம் நூற்றாண்டில் எழுதி வைப்பு

(பரிஸ்)

வல்ரசுகளை அழிக்கவும் மூன்றாம் உலகப் போரைத் தொடக்கவும் மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்த ஒருவர் தோன்றுவாரென 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தைச் சேர்ந்த பிரெஞ்சு ஞானியான நொப்றேடன், தான் ஞானத்தில் உணர்ந்தவற்றை 1000 பாடல்களின் தொகுப்பாக வழங்கியுள்ளார்.

1503 ஆம் ஆண்டு பிறந்த இவர் முதலாம், இரண்டாம் உலகப்போர் பற்றியும், பிரெஞ்சுப் புரட்சி மற்றும் சந்திரனில் காலடி எடுத்து வைப்பது தொடர்பாகவும் முன் கூட்டியே தனது பாடல்களில் விளக்கியிருந்தார்.

இவரது பாடல்களில் ஒன்றில் வடக்கின் வல்லரசாகத் திகழும் ஒரு நாட்டிற்கு கிழக்குப் பகுதியில் உள்ள நாடு ஒன்று பெரும் அச்சுறுத்தலாக அமையும். இருதுருவங்களாக உள்ள நாடுகள் ஒரு நாள் கை கோர்த்து நிற்கும். ஆனால் அந்த வல்லரசு ஒரு நாள் இரத்தக் களமாகுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வல்லரசு நாட்டில் கொடூரம் தாண்டவமாடும். இரத்த ஆறு ஓடும் இதை அழிக்க மத்திய கிழக்கிலிருந்து ஒருவர் வருவார். இவர் அரபு நாட்டைச் சேர்ந்தவர்.

வல்லமை பொருந்திய அந்த மனிதர் நீலநிறம் ஆடைஅணிந்திருப்பார்' ஐரோப்பாவில் நுழையும் அந்த மனிதரால் பல பயங்கரங்கள் நிகழுமென அந்த பாடலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5)

## தீர்ப்பு வழங்குவதை நீதிபதிகள் ஒத்திவைப்பு

(சென்னை)

மாநில முதலமைச்சரை நியமிக்கும் விடயத்தில் மாநில ஆளுநரின் முடிவில் யாரும் தலையிட முடியாதென்று தமிழக அரசின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் தெரிவித்தார்.

செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக நியமனம் பெற்றமை முறை கேடானது என்றும், ஏற்கனவே தண்டனை வழங்கப்பட்ட ஜெயலலிதாவிற்கு முதலமைச்சர் பதவி கொடுத்திருக்கக் கூடாதென்றும் எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை சென்னை உச்சநீதி மன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதில் மத்திய அரசின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் சோலிஜூறச்சி. அவ்வழக்கினால் செல்வி ஜெயலலிதா பதவி இழக்க நேரிட்டால் அவரதுமந்திரி சபையும் பதவியிழந்ததாகக்கருதப் படுமல்லவா என்று கேள்வி எழுப்பினார்.

ஐந்து நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்றம் விசாரணை நிறைவு செய்த நிலையில் தீர்ப்பு வழங்குவதை நீதிபதிகள் ஒத்திவைத்துள்ளதாக அறிவித்தனர். (து)

## உலகம்முழுவதும் நிமிடந்தோறும் 8 சிசுக்கள் உயிரிழப்பு

(லண்டன்)

உலகம் முழுவதும், ஒவ்வொரு நிமிடமும் ஒரு மாதத்திற்கு குறைவான வயதுடைய 8 சிசுக்கள் உயிரிழப்பதாக யுனிசெவ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

163 நாடுகளில் இது பற்றி விபரங்கள் சேகரிக்கப்பட்டபின் வெளியிடப்பட்ட அறிக்கையில்;

வருடந் தோறும் உலகம் முழுவதும் ஒரு மாதத்திற்கு குறைவான வயதுடைய இறக்கும் சிசுக்களின் எண்ணிக்கை 4 மில்லியனாக காணப்படுவதாகவும்,

சிசு மரண வீதம் கடந்த 10 ஆண்டுகளில் குறைந்து உள்ளதாகவும் அந் நிறுவனம் தெரிவித்துள்ளது. (உ-7)

## பயங்கரவாதத்தை அழிக்க இந்தியா ஒத்துழைக்கும்

### பிரதமர் வாஜ்பாய் கடிதம்

(புதுடில்லி)

அமெரிக்காவின் வாஷிங்டன் மற்றும் நியூயோர்க் நகரங்களில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலால் ஏற்பட்ட அளப்பரிய சோக சம்பவம் குறித்து ஆழ்ந்த துயரமும் பீதியும் அடைவதுடன் இந்திய மக்களும் எனது அரசாங்கமும் அமெரிக்க மக்களின் துயரத்தில் பங்கு கொள்கின்றனர்.

இவ்வாறு இந்தியப்பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அமெரிக்க ஜனாதிபதியோர்ச் டபிள்யூ புஷ்சுக்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

அமெரிக்க மக்களுடனும் துயரப்படும் குடும்பங்களுடனும் எனது எண்ணங்களும் பிரார்த்தனைகளும் உள்ளன.

ஈவிரக்கமற்ற இப்படு கொலைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அப்பாவி மக்களை கொன்றொழிக்கும் இச் செயலில் பயங்கரவாதிகள பெற்ற வெற்றி மறக்கமுடியாத பயங்கரமான ஓர் இருண்ட நினைவாகும்.

இப்படுகொலைகள்தொடர்பான தேடுதலிலும் அனைத்துலகரீதியாக பயங்கரவாதத்தை அழிப்பதற்கும் எமது ஒத்துழைப்பை வழங்கவும் நாம் பங்காளிகளாக இருப்பதை பலப்படுத்தவும் தயாராக உள்ளோம் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விமானசேவை ரத்து

(வாஷிங்டன்)

நியூயோர்க், வாஷிங்டன் மீது தாக்குதல் இடம் பெற்ற பின்னர் ஆரம்பிக்கப்பட்ட நியூயோர்க் விமானசேவை மீண்டும்ரத்துசெய்யப்பட்டுள்ளது.

போலிக்கடவுச்சீட்டுக்களையும், விமானிகள் அனுமதிப் பத்திரத்தையும் வைத்திருந்த இருவர் சந்தேகத்தின் பேரில் கைதானதைத் தொடர்ந்து இவ்விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (உ-7)

## ஜெயாவை தோற்கடிக்க பா.ஜ.க. புது வியூகம்

(சென்னை)

தமிழக உள்ளூராட்சித் தேர்தலில் அ.இ.அ.தி.மு.கவைத் தோற்கடிப்பதற்கு புதிய வியூகம் ஒன்றை பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர்கள் அமைத்து வருகின்றனர்.

தேசிய ஜனநாயக முன்னணியில் ஏற்கனவே இணைந்துள்ள பாட்டாளி மக்கள் கட்சியையும் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் தமிழகத்தில் தி.மு.க. இணைந்த கூட்டணியில் சேர்க்கும் முயற்சியில் தமிழக பாரதிய ஜனதாக் கட்சியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்தபுதன் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸைச் சந்தித்துப் பேசிய பாரதிய ஜனதாக் கட்சிப் பிரமுகர்கள் தொடர்ந்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை. கோபாலசாமியைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தி வருகின்றனர்.

புதிய கூட்டணி அமைப்பு தி.மு.க தலைவர் கருணாநிதியின் ஆசியுடன் வெற்றி பெறுமென்று அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். (து)

விளை வலியும் தன்வலியும்
மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச்செயல்

குறள்

## வலம்புரி

### பின்லேடா அஞ்சாதே!

அமெரிக்காவின் இரு பெரும் நகரங்களான வாஷிங்டன், நியூயோர்க் மீது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை யார் செய்தனரோ யாம் அறியோம். யார் செய்தாலென்ன செய்யாவிட்டாலென்ன அமெரிக்காவின் குற்றச்சாட்டு, ஒஸாமா பின்லேடன் மீதே. இதனால் ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதலை நடத்த முடிவு கட்டியுள்ளது. எந்நேரமும் அமெரிக்கக் குண்டுகள் ஆப்கானிஸ்தானின் இதய பகுதியைத் தாக்கப்போவதும், ஏதுமறியாத ஆப்கானிஸ்தானின் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதும் தவிர்க்கமுடியாத தலைவிதியாயிற்று.

அமெரிக்காவின் பரம எதிரி பின்லேடன் என்பது உலகறிந்த உண்மையாயினும், அமெரிக்கா மீதான விமானத் தற்கொலைத் தாக்குலுக்கு பின்லேடன் தான் சூத்திரதாரியா என்பது துலங்காத மர்மம்.

இந்நிலையில் பின்லேடனை ஒழிக்கும் பணியை அமெரிக்கா முன்னெடுப்பதற்கு முன்னதாக அதனை உலகிற்கு நியாயப் படுத்துவது அவசியம். அந் நியாயப்படுத்தலுக்கான சரியானதும், ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான ஆதாரங்களை தேடிக் கொண்டிருந்த அமெரிக்காவுக்கு, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் அமெரிக்க நகரங்கள் மீதான விமானத்தற்கொலைத் தாக்குதல்அமைந்து விட்டது.

உலகின் சண்டித்தனக் காரணான அமெரிக்காவுக்கு இதுவொன்று போதும். ஒஸாமா பின்லேடனை துரத்தித் துரத்தித் தாக்குவதற்கு தனது நாட்டில் பொதுமக்கள் கொல்லப்பட்டதை அனுமதிக்க முடியாதெனக் கூறும் அமெரிக்கா ஆப்கானிஸ்தானில்பொது மக்கள் கொல்லப்படுவதை எந்த மனிதநேயச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப் போகிறது.

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதல் பயங்கரவாதத்தின்உச்சக்கட்டமெனில், அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தி அதில் பொது மக்கள் கொல்லப்பட்டால் அத்தாக்குதலை எந்தப் பயங்கரவாதத்தின் கீழ் சேர்ப்பது.

தனக்கொரு நீதி, பிறருக்கொருநீதி என்றஅமெரிக்காவின்போக்கை மாற்றியமைக்க பின்லேடன் போன்றவர்கள் அஞ்சாத நெஞ்சத்துடன் இருப்பது மிகமிக அவசியம்.

---

#### பரமபிதா காட்டிய பாதை

# பாவங்கள் வீழவும், நன்மைகள் எழுச்சிபெறவும்

# இயேசுவின் வழியில் அன்புப் பணியாற்றுவோம்



இயேசு கிறிஸ்து பாவங்களின் வீழ்ச்சிக்கும் நன்மைகளின் எழுச்சிக்கும் காரணரானார். அவரே மனுக்குலத்துக்கு மீட்பை பெற்றுத் தந்தார். சாத்தானின் செயல்களை அடக்குகின்றார். அவர் அருள் வாக்கை பொருளுள்ளதாகப் போற்றி எம் வாழ்வைக் கைக் கொள்கையில் இருள் சூழ்ந்த வாழ்வு ஒளிமயமாகும் என்பது திண்ணம்.

### பாவம் மலிந்த பூமி

மனிதவுடைமையுடன் பாவம் நாற்றம் வீசி மனித மாண்புகள் செத்தழிந்து போய்க் கொண்டிருக்கும் காலமிது. எங்குபார்த்தாலும் கொலை வெறி கொண்ட கொடூர கலாசாரம் கொடிவிட்டுப் படர்கிறது. மற்றவனை வீழ்த்தி அவன் வீழ்ச்சியையே தனதுஎழுச்சியாக மாற்றத் துடிக்கும் வெறிபிடித்த போக்கு எங்கும் தெரிகிறது.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு, களவு, சூது, பழி, லஞ்சம், பேராசை, பொறாமை எனும் கீழ்மட்ட குணங்கள் மனிதனின் செயல்களைத்தினதும் மேல்மட்ட வெளிப்பாடாய் நிற்கின்றது.

அடக்கு முறையும், அடாவடித் தனமும் மலிந்து, ஒடுக்கப்பட்டவன் மீது மீண்டும் மீண்டும் வடுக்களை ஏற்படுத்துகின்ற அரசியலும் நாளுக்கு நாள் உலக மேடையில் உருவாகி வருகின்றது.

ஏதுமறியா அப்பாவி உயிர்களை உடன்பலியாக்கி அந்த ஊனத்தின் மீது தமது வெற்றிக் கானமிசைப்பது எப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய செயலாகும்?

**ஆ.ஜென்சன் றொனால்ட்**

மனிதாபிமானம் மண்குழியில் மண்டியிடுகின்றது. புதைகுழிகளும், புண்பட்ட வாழ்க்கையுமாய் மாறிப் போகிறது. சமூகம் பாவச் சகதி நாளும் நாளும் நம்மை சூழ்ந்து கொள்கிறது.

அன்பு எனும் அர்த்த நாதம் சுரம் புரழ்வுக்குட் பட்டு வெறும் சத்தமாகவே சங்கமிக்கிறது. யார் மனதிலும் அமைதியில்லை, எங்கும் சலனம், சஞ்சலம் நிம்மதியற்ற சூழல், பாவத்தின் வெற்றிக் கொடிநாட்ட சாத்தான் எங்களுக்குள் கலந்து விட்டான்.

### இறைவனின் எதிர்பார்ப்பு

இறைவன் எம்மிடம் எதிர்பார்ப்பது 'உன்னைப்போல உன் அயலானை நேசி' என்பதே ஆகும். யார் அயலான் என்பதற்கு பதில்தரும் நேரம் இதுவல்ல. உன் எதிரி கூட உனது அயலானே! அவனை நேசி! பகைமை மறந்து பண்பாய் உறவுகொள்! வேற்றுமை மற! விதண்டாவாதங்கள் விடுத்து ஒற்றுமைக்காக ஒன்றுபடு!

மனிதப்பலிகளையோ, வேறு உயிர்ப் பலிகளையோ இறைவன் எம்மிடம் பரிகாரமாய் கேட்கவில்லை. உண்மையான தூய்மையான உள்ளத்தையே அவர் காணிக்கையாகக் கேட்கின்றார்.

அரசியல் அழுக்கு மூட்டைகளை இழுத்துப் பிடித்துக் கொண்டு. ஆதிக்க வெறியுடன் பதவிக் கதிரைகளுக்காக அலைவது ஆண்டவனுக்குகந்ததல்ல.

மக்கள் சேவை செய்! அவர்கள் உரிமைகளுக்காக குரல் கொடு! அவர்கள் சுதந்திரத்தை அடகுவைத்து நீ குளிர்காயாதே! உன்னை உனது மக்களுக்காய் தியாகமாக்கு! நீ உனக்காகப் படைக்கப்படவில்லை. இறைவனுக்காக அவர் பணிகளை பாரிலே நிறைவேற்றப்படைக்கப்பட்டவன் எனவே, ஆண்டவனின் சித்தத்தை நிறைவேற்ற உன் சித்தத்தை சுத்தப்படுத்து! மனிதன் மாற வேண்டும், பாவங்கள் அகல வேண்டும்! மனிதம் மலர வேண்டும். இறைகுரல் கேட்க வேண்டும்! இதைத்தான் இறைவன் இன்று எதிர்பார்க்கிறார்.

### அன்புப் பணிபுரிவோம்

இறைமகன் இயேசு பாவங்களை வீழ்த்தி மீட்பை மனுக்குலத்துக்குத் தருவதற்காய் தன்னையே தாழ்த்தினார்; தன் எதிரிகளைமன்னித்தார்; அவர்களுக்காகஇறைவனிடம் இரக்கம் வேண்டினார். எம் பாவங்களுக்காக அவர் சிலுவை சுமந்தார்.

ஆம்! மண்ணிலே மனுமகனாய் உதித்த இறைமகன் பாவங்களின் வீழ்ச்சிக்கும், நன்மைத் தனங்களின் எழுச்சிக்கும் முதற்காரணரானார்; அவர் வழி அன்புவழி! அவர் மதம் அன்புமதம்! ஆகவே நாமும் நம்மிடையேயான சாதி, மத, இன, நிற வேறுபாடுகளை மறந்து ஒரே பரம்பொருளாம் இறைபதம் சென்று அவரிடம் சங்கமித்து வாழ அன்புப்பணி புரிவோம். அவனியையே வெல்வோம்! துன்பம் நிறைந்த பூமிதனைத் துடைத்து. அன்பின் பூக்களை பூக்கச் செய்வோம்! ஆனந்த வாழ்வமைப்போம். □

---

#### சோதிடபலன்

# கிரகங்களின் உச்சத்தை வைத்துக் கணித்தும்

# உதயலக்கினம் எந்தஇராசியென அறியலாம்

ஒரு கிரகமோ, ஒரு நட்சத்திரமோ உச்சமானால் அத்தானத்தை( அவ் இராசியை)பத்தாமிடமாகக் கருதினால் உதய லக்கினம் எந்த இராசியென்பது அறிய முடியும். முற்காலங்களில் கடிகாரம் முதலிய வசதிகளற்ற காரணத்தால் நிலவடி, சூரிய நிழலடி முதலிய அடிக்கணக்குகள் அறியமுடியாதகாரணத்தால் வானத்திலுள்ளகிரகங்களின் (நட்சத்திரங்களாகும்) உச்சத்தாலும் நேரமெடுத்து. குழந்தைகளின் பிறந்த நேரத்தைக் கணித்து வந்தார்கள்.

உச்சமாகும் நட்சத்திரத்திலிருந்து எட்டாவது நட்சத்திரம் கிழக்கில் உதயமாகும். இதுவே உதய லக்கினம் என்னும் முதலாமிடமாகும், இது போலவே, பதினான்காவது நட்சத்திரம் வடக்கில்நீசமாகவும், இருபத்தோராவது நட்சத்திரம் மேற்கில் (7-ம்இடம்) அஸ்தமனமாகவும். இருபத்தேழாவதுநட்சத்திரம்தெற்கு உச்சிவானத்தில் உச்சமாகவும் (பத்தாமிடமாக) கொண்டு இயற்கையாக பரிணமிக்கின்றது. வானத்தில் நாம் காணும்விதம், கிழக்கு (முதலாமஇடம்) உதயமாகவும், பின்உச்சி பத்தாமிடமாகவும் மேற்கு ஏழாமிடமாகவும், வடக்கு நீசஸ்தானம் நான்காமிடமாக (பாதாளம்)வும், தெரிகின்றது.

பொதுவாக ஒரு கிரகம் உச்சிவானத்தில் வந்ததும், பஞ்சாங்கத்தைப் பார்த்து அக்கிரகத்தைப் பத்தாமிடத்தில் குறித்து லக்கினத்தைப் போட்டால் உதய லக்கினம் எந்த இராசி என்பதைத் தெரிந்து கொள்ளலாம், உதாரணமாக இராக்காலத்தில் சந்திரன் உச்சிவானத்தில் வந்ததும், சந்திரன் இருக்கும் நட்சத்திரப்படி பத்தாமிடத்தில் சந்திரனைக் குறித்ததும் உதய லக்கினம் எந்த இராசியென்பது தெரிந்து விடும். அதுபோல சூரியன் உதயமாகும் போது லக்கினம்எதுஎன்பதைப் பார்ப்போமானால், சூரியன் இருக்குமிடமே முதல் இரண்டு மணித்தியாலங்களும் அதே லக்கினமாகும்; அதாவதுஇப்போதுமாசிமாதமென்றால் லக்கினம் கும்பமாகும் மாலை ஆறுமணியாகும் போது அஸ்தமன காலத்தில் சூரியனை ஏழாம் வீட்டில் சிங்கத்தில் குறிப்பிடலாம். அத்துடன் இரவு பன்னிரண்டுமணியாகும் சூரியன் வடக்குப் பாதாளத்தில் நீசமாய் இருப்பதால் நாலாமிடம் விருச்சிக லக்கினமாக வருவதையும் அறிய முடிகிறது.

கார்த்திகை நட்சத்திரம் உச்சமாகும் போது $1\frac{1}{4}$ கடிகை 30நிமி, சிங்கத்தில் சென்று விடும். ரோகிணி உச்சமாகும் போது $4\frac{1}{2}$ நாளிகை(108நிமி) சிங்கத்தில சென்று விடும். ஆகவே ஒரு இராசியில் இரண்டு நட்சத்திரங்கள் உச்சமாகும் வரை, ஒரு இராசி இலக்கினமாக இருக்கும். முதலாமிடம் கிழக்காகவும், 10ம் இடம் தெற்காகவும், 7ம்இடம் மேற்காகவும்4ம் இடம் வடக்காகவும், மேல் கீழ் வரிசைகளாகக் காண்பதே இயற்கையின் நோக்கமாகும். ஒரு கிரகம் உச்சமானால் அதற்கு 125 பங்குபலமும், ஆட்சியானால் 100 பங்கு பலமும், நட்புப் பெற்றால் 75 பங்கு பலமும், பகை பெற்றால்50பங்கு பலமும்நீசமானால் 30 பங்கு பலமும் உடையதாகக்கொள்ளலாம்.

உச்சனைஉச்சன்பார்த்தால்
பிச்சை எடுக்க வைத்
தாலும்
நீசத்தானத்து வேந்தும்
அம்மனை உச்சவேந்தும்
சந்திரகேந்திரம் பெற்றால்
நீசபங்கராஜ யோகம்
அடைதலும் உண்டாம். □

**ச.இ. அப்புத்துரை ஜே. பி.**
நீர்கொழும்பு

---

## தினசரி தியானம்

## அகத்தில் இருப்பது

மாசற்ற அன்பர் நெஞ்சே
மாறாத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின்
தேசினையுங் காண்பேனோ?

**தாயுமானவர்**

எங்கும் நீயே நிறைந் திருப்பதால் இறைவா. உன்னை உள்ளே வழுத்தத்தெரிந்து கொண்டால் புறத்தில் உன்னைப் போற்றுவது எளிதாகிறது.

நம் மனதில் இருப்பதைத்தான் நாம் வெளியுலகிலும் காண்கிறோம். மனம் திருந்தியமையுமளவு புறவுலகில் ஒழுங்குப்பாடு இருப்பதைக் காண்போம். மனம் முற்றிலும் நேர்மையடைந்து விட்டால் புறத்திலும் அந்தநேர்மையைக் காண்போம்.

-ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்-

# அமெரிக்காவுக்கு உதவினால் தாக்குதல் நடத்தியேதீருவோம்!

## தலிபான் ஆட்சியாளர்கள் எச்சரிக்கை

(காபூல்)

**ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல்நடத்துவதற்கு உதவி செய்கின்ற நாடுகள் மீது தாம் தாக்குதல் நடத்தப் போவதாக ஆப்கானிஸ்தானின் ''தலிபான்'' ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.**

**அமெரிக்கா மீது கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற விமானத் தற்கொலைத் தாக்குதலை அடுத்து இத்தாக்குதலின் சூத்திரதாரி எனக் கருதப்படும் பின்லேடன் மறைந்திருக்கும் ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதலை நடத்த முனைந்துள்ள வேளையில் இவ் எச்சரிக்கையை 'தலிபான்'' அறிவித்துள்ளது.**

ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்காவுக்கு எந்த நாடாவது உதவினால் அவர்கள் மீது தாக்குதல் நடாத்துவோம்:

இவ்வாறு ஆப்கானிஸ்தான் தலிபான் ஆட்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தலிபான் ஆட்சியாளர்களின் இராணுவப்பிரிவு இது குறித்து வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

ஆப்கானிஸ்தான் மீது விமானத்தாக்குதல்கள் நடத்த அமெரிக்காவுக்கு உதவும் வகையில் வேறு நாடுகள் உதவி வழங்கினால், அந்நாடுகள் மீது தலிபானின் முகாஜுதீன்இராணுவப்படை புகுந்து பெருந்தாக்குதலை நடத்தும்.

இத்தாக்குதல் களுக்கும் அதனால் ஏற்படும் அழிவுகளுக்கும் அந்தந்த நாடுகளே பொறுப்பேற்கவேண்டுமெனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

இதேவேளை ஆப்கானிஸ்தான் மீது விமானத்தாக்குதல்களை மேற் கொள்ள தமது நாட்டு விமானத் தளங்களைப் பயன் படுத்தும் அனுமதியை அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் வழங்கியுள்ளது. இதனை மிரட்டும் தொனியிலேயே மேற்படி எச்சரிக்கை தலிபான் களால் விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஆப்கானிஸ்தான் அமெரிக்காவின் தாக்குதலுக்கு இலக்காகலாமென்ற அச்சத்தில் அங்கிருந்து பொது மக்கள் தொண்டர் அமைப்புக்கள் மற்றும் பொது நிறுவனங்கள் வெளியேறி வருகின்றமையும் இங்குகுறிப்பிடத்தக்கது. (இ)

### ஆப்கானிஸ்தர்களை

**விமானத்தள அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது;**

அமெரிக்காவின் தாக்குதல் இடம்பெறலாமென்ற அச்சம் காரணமாக ஆப்கானிஸ்தானில் இருந்து பொதுமக்கள் மற்றும் தலிபான் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் வெளியேறிவருகின்றனர்.

இந்நிலையில் அவர்களின் சர்வதேச விமான மூலம் இலங்கைக்கு வருபவர்களைத் தனியாகவும், கப்பல் மூலம் துறைமுகப்பகுதிக்கு வருபவர்களைத் தனியாகவும் பதிவு செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சு பணித்துள்ளது. (இ)

### மட்டுநகர். . .

றிக்கும் வெற்றியின்பின்மண்ணைப் பாதுகாப்பதற்கும் பெரும் எண்ணிக்கையில் இளைஞர் யுவதிகள் போராளிகளாக இணைந்துகொண்டுள்ளனர்.

பெற்றோர்கள் மனமுவந்து பிள்ளைகளைப் போருக்கு அனுப்பும் வரலாற்று நிகழ்வுகளும் நடக்கிறது.

படைப்பலம் பெருகுவதும் எமது மக்கள் படைப் பயிற்சி பெறுவதும் இராணுவத்தினரைப் பீதிக்குள்ளாக்கி யுள்ளது.

மட்டுநகர் மீட்பு யுத்தத்தில் பங்கெடுக்க விரும்பாத மக்கள் சிலரும் தேசவிரோதிகளும், பொய்யான கருத்துக்களைப் பரப்பி தம்மை நியாயப்படுத்த முயல்கிறார்கள்,

விடுதலைப் போரை வழி நடத்தும் எமது தலைவர் வே: பிரபாகரனின் மதிநுட்பம் உலகையே வியக்க வைப்பது நீங்கள் புரிந்து கொண்டது தான். ஆகவே மட்டுநகர் யுத்தத்தில் நீங்களும் இணைந்துகொள்ள உடன் தயாராகுங்கள்.

பிரபாகரன் காலத்தில் பிறந்து அவர் காலத்திலேயே மட்டுநகர் மீட்புக்களத்துக்கு புறப்பட்டோமெனப் பெருமைப்பட வேண்டும்

இராணுவ முகாம்களில் இருந்து விலகி இருப்பதுடன் படையணியில்உடனேஇணையுங்கள். பயிற்சிக்கு தயாராகுங்கள் என அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (இ)

### அரசின்

காணவேண்டுமென்று கூறினார்.

ரெலோ எம்.பி செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த எண்ணிக்கை குறைந்த அமைச்சரவை மாற்றம் அரசுக்கு ஒரு தற்காலிக நிவாரணத்தைக் கொடுத்திருக்கலாம். இந்தத் தகுதிகாண் அரசாங்கம் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கப் போகிறது என்பது தான் தற்போதைய கேள்வியாகும் என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. மாவை சேனாதிராசா கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த அமைச்சரவை எண்ணிக்கையை எப்பவோ குறைத்திருக்கவேண்டும். காலம் கடந்தே அரசுக்கு ஞானம் பிறந்துள்ளது. இந்த அமைச்சரவைக் குறைப்பு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண மாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார், [வ]

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும் விஷேசமாக தயாரிக்கப்பட்டது;

சுத்தமான

**வி.எஸ்.பி, நல்லெண்ணெய்**

தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

**26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

(கி/1986)

### தமிழ்த் தின

செல்வக்குமார்.

(யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்,ம.வி)

குறுநாடக எழுத்துப்போட்டி

★ செல்வி. சுகிர்தா சிறிவரதன்.

(யாழ். வேம்படி மகளிர் கல்லூரி)

கட்டுரை-கடித ஆக்கம்

★ செல்வி. ஆன்மடோனா ஆஞ்சியா முத்துக்குமாரு

(யாழ்.டொன் பொஸ்கோ வித்தி.)

சிறுகட்டுரை-எழுத்தாக்கம் இரண்டாம் இடம்

**வெள்ளிப்பதக்கம் பெற்ற மாணவர்களின் விபரம்**

● செல்வி. அம்பிகா சிறிதரன்.

(யாழ்.சுண்டுக்குழி மகளிர் கல்லூரி)

சிறுகதையாக்கம்

● செலவன். தி. திருவரங்கன்.

(வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி)

பாவோதல்

● செல்வன் மு. கனவேலழகன்.

● செல்வன் சி.க. கௌசிகன்.

● செல்வன் ச. கா.கான்டீபன்.

(மூவரும் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி)

பட்டிமன்றம்

யாழ். மாவட்டத்திலிருந்து முதற்கட்டமாக கொழும்பு சென்ற ஆறு மாணவர்களும் தங்கம், வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இரண்டாம்கட்டமாணவர்கள அணி எதிர்வரும் 18ந் திகதி கொழும்பு பயணமாகவுள்ளது.

அகில இலங்கைத் தமிழ்த் தின விழாவில் மாணவர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவரும் யாழ். மத்திய கல்லூரியின் அதிபருமான க. இராசதுரை மேற் கொண்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(ந)

## வன்னி மண்ணில் தியாகி திலீபனின் நினைவு நிகழ்வு ஆரம்பம்

[வவுனியா]

இந்திய அரசிடம் நீதி கோரி நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில் உண்ணா நோன்பிருந்து வீரகாவியம் படைத்த தியாகி திலீபனின் 14வது ஆண்டு நினைவு நிகழ்வுகள் வன்னிப் பெருநிலப்பரப்பில்நேற்று உணர்வு பூர்வமாக ஆரம்பமாகியது.

நேற்றுக்காலை 9.55 மணிக்கு ஈகைச்சுடர், மற்றும் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றி நினைவுப் பேருரையுடன் நினைவு நிகழ்வுகள் ஆரமபமாகியது.

இந்நிகழ்வுகள் இம்மாதம் 26ம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

1987ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை இந்திய அரசின் முன்நிறுத்தி உண்ணா நோன்பை ஆரம்பித்து கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில் 26ம்திகதி தியாகி திலீபன் மரணத்தைத் தழுவிக்கொண்டமை தெரிந்ததே. [ம]

## தொண்டராசிரியர் சேவை இடைநிறுத்தம்பற்றி பரமேஸ்வரன்அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் பெறத் தகுதியற்றதொண்டர் ஆசிரியர்களை உடனடியாக சேவையில்இருந்து இடைநிறுத்தி அவர்களின் பெயர் விபரங்களை தனக்குஅனுப்பி வைக்கவேண்டுமென வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின்செயலாளர் க.பரமேஸ்வரன் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் நான் அலுவலகத்தினால் வழங்கப்படும் ஒரு மில்லியன் ரூபாவிற்கு மேற்படாத நிதித்திட்டங்களை பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும்.

அதற்கு மேற்பட்ட நிதி மூலமான திட்டங்களை நான் அமைப்பின் அனுமதியுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மேற்கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தல்களும் மாகாணக்கல்விப் பணிமனை ஊடாக சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (உ-10)

### அமெரிக்கா

அமெரிக்கர் மீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் அரசபடையினரும் அதற்கு ஆதரவான அமைப்பும் விடுதலைப்புலிகளுக்குக் களங்கத்தையும், அபகீர்த்தியையும், ஏற்படுத்தும். முயற்சியில் ஈடுபட்டுவருகிறார்கள். இந் நடவடிக்கைக்கு ஏதுவாக யாழ்ப்பாணத்து மக்களைக் குழப்பும் நோக்குடன் துண்டுப்பிரசுரம் ஒன்றை திட்டமிட்டு வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்காவின் வர்த்தக மையம், மற்று பென்டகனில் உள்ள இராணுவத்தலைமையகக் கட்டடங்கள் மீதான தாக்குதல் சம்பவத்தை விடுதலைப்புலிகள் மிகவும் கொடூரமான செயலென வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் இச் சம்பவத்தின் போது பலியான அப்பாவி பொது மக்களின் குடும்பதுயரங்களில் பங்குபற்றுவதாகவும் அறிவித்துள்ளனர்.

அமெரிக்க மக்களுக்கு பாரிய மனித அழிவை ஏற்படுத்திய இத்துயரச் சம்பவத்தை சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போக்குடைய அமைப்பும் தமது அரசியல் லாபத்துக்காகப் பயன்படுத்த முயற்சிப்பது கவலைக்குரியதாகும் என்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

சிங்கள இராணுவத்திற்கு இது ஒருபாடமாகவும், அமெரிக்காவிற்கு இது ஒரு எச்சரிக்கை என்றும் தெரிவிக்கும் சுவரொட்டிகளை விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியற் பிரிவு யாழ். தபாலகத்தில் ஒட்டியதாக டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தமையும்இங்கு குறிப்பிடத்தக்கது. [ம]

## விமானப்படை அதிகாரி கைது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணையை அடுத்து விமானப்படை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமானப்படை அதிகாரியான எயார் கொமாண்டர் மாரம்பே என்பவரே கைது செய்யப்பட்டவராவர். நாசப்புலனாய்வுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இந்த அதிகாரி நீர் கொழும்பு நீதிவான் முன் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார்.

### புகுமுகமாணவர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்டு விசேட அனுமதியின் கீழ் யாழ். பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்பட்ட 2001/2002 கல்வியாண்டு கலைத்துறை மாணவர்கள் அனைவருக்குமான முக்கிய கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு கன்னாதிட்டியிலுள்ள நியூ சயன்ஸ் ஹோல் கல்வி நிலையத்தில் நடைபெற உள்ளதாக வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர் சங்கம் அறிவித்துள்ளது. (ந)

### வெள்ளவத்தை

சுமார் 45 நிமிடநேரம் தீயணைப்புப் படையினர் கடுமையாக போராடியே தீயைகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

தீப்பிடித்ததிற்கான காரணங்கள் எதுவும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை, (வ-4)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.